16th March 1960]

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லிய சப்ஸிடைஸ்ட் இன்டஸ்டிரியல் ஸ்கீம் பற்றியது. இம்மாதிரி வீட்டையும் அவர்களே கட்டிக்கொள்ளலாம். ஆனால் தொழிலாளர்கள் தாங்களே வீட்டைக் கட்டிக் கொள்ள வேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கம். 10 சத விகிதம் கொடுக்கக் கூடிய வசதியுள்ளவர்களுக்கு கடன் கொடுக்கப்படும்.

SRI V. K. KOTHANDARAMAN : சர்க்கார் கொடுக்க முடியவில்லை என்று சொன்னார்கள். எங்கெங்கு கிரடிட் சொசைடிகள் உள்ளனவோ அங்கு இந்த சொஸைடியின் மூலமாக சட்டத்தில் விசேஷ விதிவிலக்கு கொடுத்து 400 ரூபாய் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை சர்க்கார் செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்கார் கடன் தொகையை திருப்பிக் கொடுக்கக்கூடியவர்கள் எந்த அளவிற்கு இருக்கிறார்களோ அந்த அளவிற்குத்தான் கடன் கொடுக்க முடியும். இப்பொழுது 65 சதவிகிதம் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த சதவிகிதத்தை இன்னும் 75 சத விகிதமாக உயர்த்தினால் மாதாமாதம் செலுத்தவேண்டிய தவணைகள் உயர்ந்துக் கொண்டே போய்விடும். அதை அவர்களால் கொடுக்க முடியாது.

SRI A. GOVINDASAMY : சர்க்கார் பல தொழிலாளர்கள் செலுத்தவேண்டிய 10 சத விகிதத்தையும் கட்டியும் சர்க்கார் கொடுக்கவேண்டிய தொகை கொடுக்காமல் இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நான் இதைப்பற்றி கனம் அங்கத்தினர் கேள்வி போடும்போது சொன்னேன். தனியாகக் கேள்விபோட்டால் பரிசீலனை செய்து பதில் அளிக்கப்படும்.

DEPUTY SPEAKER : Questions are over.

II.—CALLING ATTENTION TO THE FAILURE OF GOVERNMENT TO SANCTION FAMINE RELIEF WORK FOR POLUR, KALASAPAKKAM AND TIRUVANNAMALAI BLOCKS.

*SRI S. M. ANNAMALAI : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, சென்ற சட்டமன்றக் கூட்டத்தின்போது ஏறக்குறைய 9-30 a.m. இரண்டு ஆண்டுகளுக்கு முன் கூட ஆர்க்காடு மாவட்டத்தில் தொடர்ந்து மழை இல்லாத காரணத்தால் பஞ்ச நிலைமை ஏற்பட்டது, அங்குள்ள மக்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள் என்று நான் சொன்னேன். அப்போது கனம் அமைச்சர் அவர்கள் " There is no famine in the North Arcot district. However the condition is not satisfactory ".

என்று சொன்னார்கள். பிறகு கனம் அமைச்சர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்தபோது உண்மை நிலையை உணர்ந்து பஞ்ச நிவாரணவேலை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள்.

தான் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று நான் சொல்லியும், அதற்கு உதவி ஒன்றும் செய்யாமல், அவர்களுடைய தொகுதியாகிய சேத்துப்பட்டு வட்டாரத்திற்கு மட்டும் பஞ்சநிவாரண வேலை ஆரம்பிப்பதற்கு உத்திரவு போட்டிருக்கிறார்கள். நான் சொல்லி யிருக்கும் பகுதியில் பஞ்சநிவாரணவேலை ஆரம்பிக்காததினால் அங்கு வாழும் மக்கள் வாழ வழியில்லாமல் ஷிமோகா, பத்திராவதி போன்ற இடங்களில் போய் அங்கு வேலை கிடைக்குமோ கிடைக் காதோ என்ற நிச்சயமற்ற நிலைமையில் இருக்கிறார்கள். சமீபத் தில் கனம் அமைச்சர் அவர்கள் வட ஆர்க்காடு ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது நான் சொன்னேன் போளூர் தொகுதியில் ஒருவிதமான பஞ்சநிவாரண வேலையும் ஆரம்பிக்கப் படவில்லை என்று. அதற்கு கனம் அமைச்சர் அவர்கள் அப்படி ஆரம்பிக்கவில்லையா என்று சொல்லி, உடனடியாக அங்கு ஆரம் பிக்கவேண்டுமென்று அதிகாரிகளுக்குச் சொன்னார்கள். அவர்கள் அதன் பிரகாரம் பஞ்சநிவாரணவேலை ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU: Mr. Deputy Speaker, in October 1959, the Collector of North Arcot reported that adverse seasonal conditions prevailed in the taluks of Polur and Tiruvannamalai and requested that the relief works might be sanctioned in Kilpannathur and Thurinjapuram firkas in Thurinjapuram block in Tiruvannamalai taluk and Mandakolathur and Thatchambadi firkas in Chetpet block in Polur taluk to provide employment to the agricultural labourers in the areas. The Government sanctioned a sum of Rs. 1,50,000 for the execution of Minor Irrigation and Road Works and for deepening of drinking water wells in these areas. The Collector of North Arcot has accordingly undertaken 26 Minor Irrigation works, 11 Rural Water supply scheme works and 26 road works for execution in these two taluks. The Collector has subsequently recommended four more new road works, and the metalling of two roads in the two taluks to be taken up, the expenditure of which is estimated to exceed Rs. one lakh over and above the amount already sanctioned. The Collector has also proposed to execute two road works in Tirupattur taluk in order to provide employment for the villagers affected by adverse seasonal conditions in Javadi Hills at an estimated cost of Rs. 28,000. These proposals are under the consideration of the Government. It may therefore be seen from the above facts that the Government had assessed the situation and taken steps to relieve the distress caused by the adverse seasonal conditions in the affected areas in the district, and that the question of affording further relief is being considered. இந்த பிரச்னையில் ஒருவர் தொகுதி இன்னொருவர் தொகுதி என்ற வித்தியாசம் இல்லை. எங்கே பஞ்ச நிலைமை இருக்கிறதோ அங்கு பஞ்சநிவாரண வேலை ஆரம்பிக்கப்படும். பஞ்ச நிலைமை இல்லாதயிடத்தில் நட வடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இல்லை.